**புத்தசாசன நிதியம் - 2015**

புத்தசாசன நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதிய மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தசாசன நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் முன்னைய காலப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள தவறுகளை கண்டறிந்ததன் பின்னர் வழங்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுக்களின் தொகுதியிலேயே முன்னோக்கிய சீராக்கம் செய்யப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் பெறுவனவுகளான ரூபா 684,716 தொகை முன்னோக்கிச் சீராக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் திரண்ட நிதியத்திற்கு முறையே ரூபா 481,982 மற்றும் ரூபா 202,734 சீராக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியத்திற்கு கிடைக்கும் பல்வேறு நன்கொடைகள், வருமானமொன்றாக இனங்காணல் மற்றும் மூலதனத்தின் பிரிவொன்றாக கவனத்திற்கொள்ளும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

அரச வெசாக் விழாவிற்காக மீளச் செலுத்தும் அடிப்படையில் புத்தசாசன அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 8,000,000 தொகை பொறுப்பொன்றாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக நன்கொடையொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 12,896,050 பெறுமதியான பௌத்த தர்ம நூல்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 8 (ஆ) பிரிவு | முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் இலங்கை மத்திய வங்கியில் திறக்கப்பட்டுள்ள நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும், ரூபா 1,726,348 தொகையான வருமானம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீ.எப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.2 (ஈ) பந்தி | வங்கிக் கணக்குகளும் புத்தகங்களும் இணக்கஞ் செய்து காலாண்டு ரீதியாக அறிக்கை தயாரித்து அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதியத்திற்குக் கிடைத்த மொத்த நன்கொடை பணத்தில் 85 சதவீதம் அதாவது ரூபா 66,820,561 தொகை தனியார் கம்பனியொன்றிலிருந்து கிடைத்திருந்ததுடன் அந்த நன்கொடை புத்தசாசன நிதியத்தின் ஊடாக விகாரை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட புத்தர் சிலையொன்றை வடிவமைக்கும் செயற்பாடுகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக நிதியம் தலையீடு செய்திராததுடன் நன்கொடையளித்த கம்பனியாலேயே ஒப்பந்தக் கையளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், நன்கொடைகளை மாற்றுவதற்காக மாத்திரம் நிதியம் நடுவராக செயற்பட்டிருந்ததுடன் அது நிதியத்தின் நோக்கங்களுடன் இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், புத்தர் சிலையினை வடிவமைக்கும் செயற்பாடுகளுக்கான செலவினங்களை உறுதிப்படுத்தும் பட்டியல்கள் நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டில் கிடைத்த நன்கொடைகளை விடுவிப்பதன் மூலம் நூற்றுக்கு ஒரு சதவீதம் தரகு வருமானமாக ரூபா 137,000 தொகை நிதியத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், மொத்த தொகையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட புண்ணிய நிறுவனமொன்றிற்கு வழங்கிய நன்கொடையாக காட்டப்பட்டமையால் அரசிற்கு இழப்பாகக்கூடிய வரி வருமானம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 27,945,573 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,401,904 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,456,331 தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முதலீட்டு வருமானம் ரூபா 4,005,330 இனால் குறைவடைந்தமை நிதி விளைவிலான வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தசாசன நிதியத்தின் செயற்பொறுப்பாக புத்தசாசனத்தைப் பாதுகாத்தல் மற்றும் போஷித்து வளர்த்தல் மிகவும் யோக்கியமுள்ள கட்டுப்பாட்டுச் சபை கவனமெடுக்கின்ற முறை மற்றும் அவ்வாறு கவனமெடுக்கின்ற செயற்பாடுகளுக்காகவும் பணத்தைப் பயன்படுத்தல் ஆகும். அதன் பிரகாரம், புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின், 07 ஆம் பிரிவின் பிரகாரம் அசையும் அல்லது அசையாத ஏதேனுமொரு சொத்தினைக் கைப்பற்றிக் கொள்ளல், செலவிடல் மற்றும் முகாமை செய்தல், நிதியத்திற்குரிய அசையும் அல்லது அசையாத ஏதேனுமொன்றின் அகற்றுதல், புத்தசாசனத்தைப் பாதுகாத்தல் மற்றும் போஷிப்பதற்காக நிறுவனங்களை தாபித்தல் மற்றும் புத்தசாசனத்தை பாதுகாப்பதிலும் போஷிப்பதிலும் நிரந்தரமாக ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு முகாமைத்துவ உதவிகள் வழங்குதல், நிதியத்தின் நிர்வாகத்திற்குரிய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் விதிகளைப் பிரயோகிப்பதற்கு நிதியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிதியத்தினால் புத்தசாசனத்தின் முன்னேற்றத்திற்காக மொத்த செலவில் 80 சதவீதம் அல்லது ரூபா 5,075,942 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், நிதியத்திற்குச் சொந்தமான மொத்தச் சொத்துக்களில் 91 சதவீதம் அல்லது ரூபா 483,124,345 தொகை மூன்று அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. பண முதலீட்டிலிருந்து வட்டி சேகரிக்கப்பட்டிருந்ததெனினும், புத்தசாசன அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை உபயோகித்து உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ரீதியாக நிதியத்திற்கு நிதி சேகரிப்பதற்கு பொருத்தமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிராததுடன், நிதியத்தில் தற்போது காணப்படும் பணத்தை புத்தசாசனத்தின் முன்னேற்றத்திற்காக செலவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக புத்தசாசன அமைச்சினால் ரூபா 2,357,957 தொகை மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக நிதியத்தினாலும் ரூபா 780,510 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிதியத்தினால் சம்பிரதாய நடவடிக்கைகளின் ஒரு பகுதி மாத்திரம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டிருந்ததெனினும், நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறைவேற்றப்படவேண்டிய ஏனைய செயற்பணிகள் தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுனாமி நன்கொடை மற்றும் உதவிகள் மற்றும் பல்வேறு நன்கொடைகளாக பெறப்பட்டிருந்த முறையே ரூபா 1,348,796 தொகை மற்றும் ரூபா 1,448,096 தொகை உரிய நோக்கத்திற்கான செயற்பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ரூபா 317,400 பெறுமதியான புத்த ஜயந்தி நாணய இருப்பானது விற்பனை செய்யப்படாமல் காப்பகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி பாளி அதிகதாவை சிங்களத்திற்கும் ஆங்கிலத்திற்கும் மொழி மொழிபெயர்த்தல், அச்சிடல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள்

தனியார் அச்சகத்திற்கு கையளிக்கப்பட்டு அதற்காக 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 8,569,440 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 12 பாளி அதிகதாக்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பு செய்து அச்சிடுவதற்கு ரூபா 1,080,165 முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச்சிடப்பட்ட புத்தகங்களை நிதியத்திற்கு பெற்றுக்கொண்டு பெறவேண்டிய முற்பணக் கணக்கினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பாளி அதிகதா சிங்கள புத்தகங்களை அச்சிட்டு விற்பனை செய்ததன் மூலம், நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 7,988,635 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் கொண்டுவரப்படும் பாளி ரீகா சிங்கள மொழிபெயர்பிற்காக செலுத்த வேண்டிய ரூபா 544,409 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 09 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், நிதியத்தினால் பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக எதுவிதமான புதிய செயற்திட்டமும் மீளாய்வாண்டில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாடெங்கிலும் கடமையிலுள்ள மதகுருமார்களுக்கு மருத்துவ மற்றும் ஆயட்காப்புறுதி முறைமையொன்றினை ஆரம்பிப்பதற்கு அமைச்சினால் ரூபா 5,000,000 வழங்கப்பட்டிருந்ததெனினும், அந்தப் பணத்தில் நிலையான வைப்பொன்றினை ஆரம்பித்தமை தவிர செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக எதுவித நடவடிக்கையும் ஆண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தம்பதிவ யாத்திரைக்கு செல்லாத வயது முதிர்ந்த மதகுருமார்களுக்காக அந்த புனித தலத்தினை தரிசிப்பதற்காக வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தல் ஒரு நோக்கமாக இருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியணி முகாமைத்துவம்

போதியளவான மற்றும் பொருத்தமான உத்தியோகத்தர்களை உள்ளீர்க்கக்கூடிய விதத்தில் பதவியணியொன்றினை அங்கீகரித்திராமையின் காரணமாக நிறுவனத்தின் வேலைப்பகிர்வு செயற்பாடுகள் முழுமையடையாதிருந்ததுடன், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதியத்தின் பயன்பாடு தொடர்பான கட்டுப்பாடு | நிதியத்திற்குச் சொந்தமான நிதி வளங்கள் வெளி நிறுவனங்களில் முதலீடு செய்து வருமானமீட்டுவதை விட புத்தசாசனத்தை போஷிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணக்கீடு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு | கணக்கு நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை இடம்பெறும் விதத்தில் பணிப் பகிர்ந்தளிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நூல் வெளியீடுகளை மேம்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடு | நிதியத்திற்குச் சொந்தமான புத்தகங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வினை மேற்கொள்ளல், சரியான மற்றும் முழுமையான அறிக்கைகளை பேணுதல், இருப்புப் புத்தகங்களை நாளதுவரையாக்கல், வெளியீடுகளை அச்சிடல், விற்பனை மற்றும் களஞ்சியப்படுத்தல் உரிய பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை. |